# ලංකාණ්ඩුවේ ගැසට් පත්‍රය

# இலங்கை அரசாங்க வர்த்தமானப் பத்திரிகை

අංක 12,119 — 1960 අප්‍රේල් 29 වැනි සිකුරාදා — 29.4.1960.

12,119 ம் இலக்கம் — 1960 ம் ஆண்டு எப்றில் மாதம் 29 ந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I: தொகுதி (II) — விளம்பரங்கள்

[ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறுகக் கோவைசெய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளது.]


| | பக்கம் |
|---|---|
| பதவிகள்—வெற்றிடம் .. .. .. | 99 |
| பரீட்சைகளும், பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் .. | 100 |
| கேள்விப்பத்திர அறிவித்தல்கள் .. .. | 100 |
| கேள்விப்பத்திர முடிவுகள்பற்றிய அறிவித்தல்கள் .. | — |
| பொருட்கள் விற்பனையும், பிறவும் .. .. | — |
| ஆய விற்பனையும் குத்தகை விற்பனையும் .. .. | — |
| உத்தியோகத் தொடர்பற்ற அறிவித்தல்கள் .. | — |
| அந்நிய குடிவகை உத்தரவுச்சீட்டு விண்ணப்பங்கள் .. | — |
| ஏல விற்பனைகள் .. .. .. | — |
| நாணுவிதம் .. .. .. | — |


## பதவிகள்—வெற்றிடம்

கல்வித் திணைக்களம்,
மலாய் வீதி, கொழும்பு 2,
1960 ம் ஞூ எப்றில் மீ 22 ந் உ.

### அரசாங்கத் தமிழ்/முஸ்லிம் ஆசிரியர் 1–ம், 2–ம் தர உயர்வு

**அ. I. இரண்டாம் தர உயர்வு**

பழைய உயர்வுத்திட்டத்தின் கீழ் சிறிய பாடசாலைத் தலைமை ஆசிரியர் என்றும் பத்து ஆசிரியருக்கு உரித்துடைய பாடசாலைகளின் சிரேட்ட உதவி ஆசிரியர் என்றும் வழங்கப்பட்ட இப்பதவி, புதிய உயர்வுத்திட்டத்தின் கீழ் " இரண்டாம் தரம் " என்று வழங்கப்பெறும். இத்தரத்துக்கு உயர்வு பெற்ற ஆசிரியர் ஒருவர் தமிழ் மொழி மூலம் கல்வி கற்பிக்கும் எந்தப் பாடசாலையிலேனும் சம்பள இழப்பின்றித் தலைமை ஆசிரியராக வேனும் உதவி ஆசிரியராகவேனும் கடமையாற்றலாம். இத்தரத்துக்கு உயர்வு பெறுபவர்கள் தத்தம் தராதரத்துக்குத் தக்கவாறு கீழ்க்காணும் விகிதத்தில் சம்பளம் பெறுவர் :—

பயிற்றப்பட்ட முதலாம் வகுப்பு—ரூ. 1,524—72—120—3,180
பயிற்றப்படாத முதலாம் வகுப்பு—ரூ. 1,488—72—2,280

**முஸ்லிம் ஆசிரியர்**

கீழ்த்தரப்படும் நிபந்தனைகளுக்கமையும் எல்லா முதலாம் வகுப்புத் தராதரப் பத்திரத்தைக் கொண்ட முஸ்லிம் ஆசிரியரும் 1.4.60 ம் திகதி முதல் இத்தரத்துக்கு உயர்வு பெறுவர் :—

(i) 1.4.60 இல் பயிற்றப்பட்ட ஆசிரியராக ஆறு வருடசேவையை நிறைவு செய்த முஸ்லிம் உதவி ஆசிரியர், இவர்கள் அரசாங்கத்தின் கீழ் குறைந்தது ஐந்து வருடசேவையைப் பூர்த்தி செய்திருக்க வேண்டும்.

(ii) 1.4.60 இல் பயிற்றப்படாத முதலாம் வகுப்புத்தராதரத்தைக் (ஆசிரிய தராதரப் பத்திரம்) கொண்ட முஸ்லிம் ஆசிரியர், இவர்கள் முதலாம் வகுப்புத் தராதரத்துடன் குறைந்தது ஆறு வருட சேவையையும் அரசாங்கத்தின் கீழ் குறைந்தது ஐந்து வருட சேவையையும் பூர்த்தி செய்திருக்க வேண்டும்.

**II. தமிழர் ஆசிரியர்**

கீழ்த்தரப்படும் நிபந்தனைகளுக்கமையும் எல்லா முதலாம் வகுப்புத் தராதரத்தைக் கொண்ட தமிழர் ஆசிரியரும் 1.4.60 ம் திகதி முதல் இத்தரத்துக்குப் பதவி உயர்வு பெறுவர் :—

(i) 16.9.52 ந் திகதியன்று அன்றேல் அதற்கு முன்பு முதலாம் வகுப்புப் பயிற்றப்பட்ட தராதரப் பத்திரத்தைப் பெற்ற சகல தமிழர் ஆசிரியர்.

(ii) உதவி நன்கொடை பெறும் பாடசாலைகளில் ஒருகால் சேவை செய்து அதன் பின் அரசாங்க சேவையில் 16.9.52 ந் திகதிக்கு முன் பயிற்றப்பட்ட முதலாந்தரத் தராதரப் பத்திரத்துடன் நியமிக்கப்பட்ட தமிழர் ஆசிரியர்.

(iii) 1.12.29 ந் திகதிக்கு முன் அரசாங்கத்தின் கீழ் நியமிக்கப்பட்ட, ஆனல் 1.3.48 ந் திகதிக்கு முன் முதலாம் வகுப்புப் பயிற்றப்படாத (ஆசிரியர் தராதரப் பத்திரம்) தராதரத்தைப் பெற்ற தமிழர் ஆசிரியர்.

III. நிரந்தர நியமனத்தை முற்போடப்பட்டிருப்பின் அச்சேவை பதவி உயர்வுக்கு , உரிய சேவையைக் கணிப்பதற்கு எற்றுக் கொள்ளப் படமாட்டாது.

**ஆ. முதலாம் தர உயர்வு**

பழைய உயர்வுத்திட்டத்தின் கீழ் பெரிய பாடசாலைத் தலைமை ஆசிரியர் என்று வழங்கப்பட்ட இப்பதவி, புதிய உயர்வுத்திட்டத்தின் கீழ் " முதலாந் தரம் " என்று வழங்கப்பெறும். இத்தரத்துக்கு உயர்வு பெற்ற ஆசிரியர் ஒருவர் தமிழ் மொழி மூலம் கல்வி கற்பிக்கும் எந்தப் பாடசாலையிலேனும் சம்பள இழப்பின்றித் தலைமை ஆசிரியராக வேனும் உதவி ஆசிரியராகவேனும் கடமையாற்றலாம். இத்தரத்துக்கு உயர்வு பெறுபவர்கள் தத்தம் தராதரத்துக்குத் தக்கவாறு கீழ்க்காணும் விகிதத்தில் சம்பளம் பெறுவர் :—

பயிற்றப்பட்ட முதலாம் வகுப்பு—ரூ. 1,776—72—120—3,360
பயிற்றப்படாத முதலாம் வகுப்பு—ரூ. 1,728—72—2,520

**முஸ்லிம் ஆசிரியர்**

1.7.51 க்கு முன் இரண்டாந் தரத் தலைமை ஆசிரியராகப்பதவி உயர்வு பெற்றுள்ள சகல முஸ்லிம் ஆசிரியரும் 1.4.60 ந் திகதி முதல் உயர்வு பெறுவர்.

2. மேற்றரப்பட்டுள்ள அடிப்படையில் உயர்வு பெற உரித்துடைய சகல ஆசிரியரும் இத்துடன் இணைக்கப்பட்டுள்ள மாதிரிப் பத்திரத்தில் விபரங்களை நிறைவு செய்து திரு. எம். பி. நூர்தீன், உதவிக் கல்வி அதிபதி, மாற்றக்கிளை, கல்வித் திணைக்களம், கொழும்பு 2, என்ற தனிப்பட்ட விலாசத்துக்கு மே மாதம் 16 ந் திகதிக்கு முன் பதிவுத் தபால் மூலம் விண்ணப்பிக்கவேண்டும்.

எஸ். எவ். டி சில்வா,
கல்வி அதிபதி.

**1 ம், 2 ம் தர உயர்வு விண்ணப்பம்**

1. ஆசிரியர் பெயர் : ———— .
2. பதிவு எண் : ———— .
3. இப்போதய விலாசம் : ———— .
4. மாவட்டக் குறியீட்டுடன் பாடசாலையின் பெயர் : ———— .
5. தராதரம் : ————.
   (i) இரண்டாம் வகுப்புத் தராதரத்தைப் பெற்ற திகதி : ————.
   (ii) முதலாம் வகுப்புத் தராதரத்தைப் பெற்ற திகதி : ———— .
6. அரசாங்க சேவையில் சேர்ந்த திகதி : ———— .
7. உமது நியமனம் முற்போடப்பட்டதா ?
   அவ்வாறுயின் முற்போடப்பட்ட காலவரையறை கடிதத்தின் தொடர்பு எண் முதலிய விபரங்களைத் தருக : ———— .
8. முதுமுறை எண் : ———— .
9. இப்போதய சம்பள விகிதம் : ———— .
10. இரண்டாந் தரத்துக்குப் பதவி உயர்வு பெற்றவராயின், உயர்வு பெற்ற திகதியும் பிற விபரங்களும் : ———— .

மேற்றரப்பட்டுள்ள விபரங்கள் யாவும் சரியானவையென்று இத்தால் உறுதியளிக்கின்றேன்.

————,
திகதி : ———— . ஆசிரியர் ஒப்பம்.

செவ்வை பார்த்துச் சரியெனக் காணப்பெற்றது.

————,
திகதி : ———— . தலைமை ஆசிரியர்.

# பரீட்சைகளும், பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும்

1/3/5 (ஜி) II ம் பாகம்

## மத்திய எழுதுவினைஞர் பரீட்சை—பெப்ருவரி, 1958

1958 ம் ஆண்டு அக்டோபர் மாதம் 24-ம், நவம்பர் மாதம் 14 ம், 1959 ம் ஆண்டு பெப்ருவரி மாதம் 6 ம், பெப்ருவரி மாதம் 20 ம், மார்ச்சு மாதம் 20 ம், மே மாதம் 29 ம், ஜூலை மாதம் 10 ம், செப்டெம்பர் மாதம் 18 ம், நவம்பர் மாதம் 20 ம், டிசம்பர் மாதம் 18 ம், 1960 ம் வருடம் ஜனவரி மாதம் 1 ம், பெப்ருவரி மாதம் 5 ந், பெப்ருவரி மாதம் 26 ந் திகதிகளில் 11,564, 11,584, 11,659, 11,670, 11,705, 11,752, 11,805, 11,856, 11,959, 12,010, 12,027, 12,055, 12,068 ம் இலக்கங்களைக் கொண்ட அரசாங்க வர்த்தமானிகளில் பிரசுரிக்கப்பட்ட, 1958 ம் ஆண்டு அக்டோபர் மாதம் 21 ம், நவம்பர் மாதம் 11 ம், 1959 ம் ஆண்டு ஜனவரி மாதம் 30 ம், பெப்ருவரி மாதம் 17 ம், மார்ச்சு மாதம் 17 ம், மே மாதம் 26 ம், ஜூலை மாதம் 6 ம், செப்டெம்பர் மாதம் 14 ம், நவம்பர் மாதம் 13 ம், டிசம்பர் மாதம் 12 ம், டிசம்பர் மாதம் 28 ம், 1960 ம் ஆண்டு ஜனவரி மாதம் 25 ந், பெப்ருவரி மாதம் 22 ம் திகதிகளிடப்பட்ட தனித்தனி விளம்பரங்களைத் தொடர்ந்து, 1958 ம் ஆண்டு பெப்ருவரி மாதம் நடாத்தப்பட்ட மத்திய எழுதுவினைஞர் பரீட்சையில் கீழ்க்காணும் பரீட்சார்த்திகளும் பொது எழுதுவினைஞர் சேவையின் பொது எழுதுவினைஞர் வகுப்பில் நியமனம் பெறுவதற்குத் தெரிவு செய்யப்பட்டுள்ளார்களென இத்தால் அறிவிக்கப்படுகிறது.

| பெயர் | | விலாசம் |
|---|---|---|
| அமரசேன, பா. | .. | கொ/தெல்தர சிரேஷ்ட பாடசாலை, பிலியந்தலை. |
| ஆனந்த த சில்வா, ம.க. | .. | கலமெட்டிய, உங்கமை. |
| இபுறுகீம், மு.கா.மு. | .. | கிராமத் தலைமைக்காரன், எருக்கலம்பிட்டி. |
| உக்கு பண்டா, கா.மு. | .. | றெகோகமை, பலல்ல. |
| கார்த்திகேசு, கு. | .. | நீர்ப்பாசன அலுவலகம், வவுனி குளம், மாங்குளம். |
| குருநாதன், அ. | .. | 9 ம் குறிச்சி, மடத்தடி, திருகோணமலை. |
| சந்திரசேகரம்பிள்ளை, சி. | .. | பன்னாலை, தெல்லிப்பழை. |
| சுமனதாச, அ.ஆ. | .. | தெதிகம, துந்தொட்டை. |
| சோமசுந்தரம், ஆ. | .. | காவலெல்லை வன உத்தியோகத்தர், வனப் பகுதி, கிளிநொச்சி. |
| டயஸ், க. லோ. | .. | வ/ஹெம்பரவ அரசினர் பாடசாலை, மஹியங்கனை. |
| தயாநந்த, ஜ.பே. | .. | ஹமன்னபஹுவ, நாகொல்லாகொடை, குருநாகல். |
| திசாநாயக்க, பி. | .. | பிரிவு போக்குவரத்து அதிகாரி அலுவலகம், இலங்கை அரசாங்க புகையிரதப் பகுதி, அநுராதபுரி. |
| நடராசா, ஆ. | .. | வேத்தியற் இலங்கை விமானப் படை, தியத்தலாவை. |
| பிரேமரத்ன, கோ.ப. | .. | நிந்தஹேன, கொதட்டுவை, அங்கொடை. |
| மசூர், இ.மு. | .. | 32, ஹரிசன் யோன்ஸ் வீதி, மாத்தளை. |
| லத்தீப், மு.இ.பா. | .. | " இஸ்மத் லொட்ஜ் " பலபிட்டி. |
| விக்கிரமரத்ன, கி.பீ. | .. | " இரத்னகிரி " கோனவல, களனி. |
| ஹேம்பால, லே. | .. | தபாற் அலுவலகம், எகலியாகொடை. |
| ஜயசிங்க, ஹீ.போ. | .. | சுகாதார காரியாலயம், தம்புல்லை. |
| ஸ்ரீஸ்கந்தராசா, அ. | .. | 97, செட்டி தெரு, கொழும்பு. |

2. அரசாங்கம் இப்பரீட்சார்த்திகளுக்கு உடனே உத்தியோகம் கொடுப்பதற்குப் பொறுப்பு ஏற்காது. ஆனால் இடங்கள் காலியாக வரும் பொழுது அவர்களுக்கு நியமனங்கள் கொடுக்கப்படும். எல்லா நியமனங்களும் மூன்று வருடங்களுக்கு பரீட்சார்த்தமானவையாக இருக்கும். இவர்கள் ஒரு வைத்திய பரிசோதனைக்கும் பொது எழுதுவினையர் சேவையைச் சேர்ந்த நிபந்தனைகளுக்கும் உள்ளாவர்.

பொது திறைசேரி, கொழும்பு,
1960 ம் ஆண்டு ஏப்றில் மீ 25 ந் உ.

எச். ஈ. பீரிஸ்,
திறைசேரி பிரதி செயலாளர்.

# கேள்விப்பத்திர அறிவித்தல்கள்

## நீர்ப்பாசன இலாகா

வடமேல் மாகாணப் பிரிவு, குருநாக்கல் பெரும்பாக நீர்ப்பாசன இஞ்சினியர், குருநாகல் தொகுதியிலிருக்கும் ஹக்வட்டுனு ஓயாத் திட்டத்தில் மேற்பார்வையாளர்களுக்காக ஓர் நிரந்த வீடு கட்டுவதற்காக, 1960 ம் ஆண்டு வைகாசி மாதம் 18 ம் திகதி புதன்கிழமை பகல் 9.30 மணி வரை கேள்விப் பத்திரங்கள் ஏற்றுக்கொள்வார்.

கேள்விப்பத்திரங்கள் ஹக்வட்டுனு ஓயா நீர்ப்பாசன இஞ்சினியரால் வழங்கப்படும். பூர்த்தி செய்யப்பட்ட இரு கேள்விப்பத்திரங்கள், ஒப்பந் தக்காரருடைய கையொப்பத்துடனும், திகதியுடனும், பெரும்பாக நீர்ப்பாசன இஞ்சினியர், வடமேல் மாகாணப் பிரிவு, குருநாகல் என்ற விலாசத்திற்கு பதிவு செய்யப்பட்ட காகிதமாக அனுப்பவேண்டும். கேள்விப்பத்திரங்களை குருநாகல் பெரும்பாக நீர்ப்பாசன இன்ஜினியரின் காரியாலயத்தில் இருக்கும் கேள்விப்பத்திர பெட்டியிலும் சமர்ப்பிக்கலாம். காகித உறையின் இடது பக்கத்தில் வேலையின் பெயரை குறிப்பிட வேண்டும்.

கேள்விப்பத்திரங்கள் 17.5.60 நண்பகல் 12.00 வரை அலுவலக நேரங்களில் ஹக்வட்டுனு ஓயா நீர்ப்பாசன இஞ்சினியரால் வழங்கப்படும். ரூ. 15,000 த்துக்கும் அதற்கு மேலும் இவ்விலாக்காவில் பதிவு செய்யப்பட்ட ஒப்பந்தக்காரர்கள் முன்பணமாக ரூ 25 நீர்ப்பாசன இலாகா அதிபர் சார்பாக கச்சேரியில் பிணைக்கட்டி அதன் பற்றுச்சீட்டை சமர்ப்பித்துப் விண்ணப்பப்பத்திரங்களைப் பெற்றுக் கொள்ள வேண்டும்.

ஹக்வட்டுனு ஓயா நீர்ப்பாசன இன்சினியருடைய அலுவலகத்தில், அலுவலக நேரங்களில் இவ்வேலைக்குரிய படங்களைப் பார்வையிடவும் ஏனைய விபரங்களையும் அறிந்து கொள்ளலாம்.

நீர்ப்பாசன இஞ்சினியர்,
ஹக்வட்டுனு ஓயாத் திட்டம்.

நீர்ப்பாசன காரியாலயம்,
ஹக்வட்டுனு ஓயாத் திட்டம்,
மகுள் பொத்த,
இப்பகமுவ.

## நீர்ப்பாசன இலாகா

வடமேல் மாகாணப் பிரிவு, குருநாகல் பெரும்பாக நீர்ப்பாசன இஞ்சினியர், குருநாக்கல் தொகுதியிலிருக்கும் ஹக்வட்டுனு ஓயாத் திட்டத்தில் தனிப்பட்ட தொழிலாளர்களுக்காக ஓர் சிறு-நிரந்தர சாலே (வீடு) கட்டுவதற்காக, 1960 ம் ஆண்டு வைகாசி மாதம் 18 ம் திகதி புதன்கிழமை காலை 9.30 மணி வரை கேள்விப்பத்திரங்கள் ஏற்றுக் கொள்வார்.

கேள்விப்பத்திரங்கள் ஹக்வட்டுனு ஓயா நீர்ப்பாசன இன்சினி யரிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம். பூர்த்தி செய்யப்பட்ட இரு கேள்விப்பத்திரங்கள், ஒப்பந்தக்காரருடைய கையொப்பத்துடனும் திகதியுடனும், பெரும்பாக நீர்ப்பாசன இஞ்சினியர், வடமேல் மாகாண பிரிவு, குருநாகல் என்ற விலாசத்திற்கு பதிவு செய்யப்பட்ட காகிதமாக அனுப்பவேண்டும். கேள்விப்பத்திரங்களை குருநாகல் பெரும்பாக நீர்ப்பாசன இன்சினியரின் காரியாலயத்தில் இருக்கும் கேள்விப்பத்திர பெட்டியிலும் சமர்ப்பிக்கலாம். காகித உறையின் இடது பக்கத்தில் வேலையின் பெயரைக் குறிப்பிடவேண்டும்.

கேள்விப்பத்திரங்கள் 17.5.60 நண்பகல் 12 மணிவரை அலுவலக நேரங்களில் ஹக்வட்டுனு ஓயா நீர்ப்பாசன இஞ்சினியரால் வழங்கப்படும். ரூ. 15,000 த்துக்கும் அதற்கு மேலும் இவ்விலாக்காவில் பதிவு செய்யப்பட்ட ஒப்பந்தக்காரர்கள் முன்பணமாக ரூ. 25 நீர்ப்பாசன இலாகா அதிபர் சார்பாக கச்சேரியில் பிணைக்கட்டி அதன் பற்றுச் சீட்டை சமர்ப்பித்து கேள்விப்பத்திரங்களைப் பெற்றுக்கொள்ள வேண்டும்.

ஹக்வட்டுனு ஓயா நீர்ப்பாசன இன்சினியருடைய அலுவலகத்தில், அலுவலக நேரங்களில் இவ்வேலைக்குரிய படங்களைப் பார்வையிடவும், ஏனைய விபரங்களையும் அறிந்து கொள்ளலாம்.

நீர்ப்பாசன இஞ்சினியர்,
ஹக்வட்டுனு ஓயாத் திட்டம்.

நீர்ப்பாசன காரியாலயம்,
ஹக்வட்டுனு ஓயாத் திட்டம்,
மகுள் பொத்த,
இப்பகமுவ.

## நீர்ப்பாசன இலாகா

வடமேல் மாகாணப் பிரிவு, குருநாகல் பெரும்பாக நீர்ப்பாசன இஞ்சினியர், குருநாகல் தொகுதியிலிருக்கும் ஹக்வட்டுனு ஓயா திட்டத்தில் ஓர் சிறு-நிரந்தர பண்டகசாலை கட்டுவதற்காக கேள்விப்பத்திரங்கள் 1960 ம் ஆண்டு வைகாசி மாதம் 18 ம் திகதி புதன்கிழமை காலை 9.30 மணி வரை ஏற்றுக்கொள்வார்.

2. கேள்விப்பத்திரங்கள் ஹக்வட்டுனு ஓயா நீர்ப்பாசன இஞ்சினியரிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம். பூர்த்திசெய்யப்பட்ட இரு கேள்விப்பத்திரங்கள் ஒப்பந்தக்காரருடைய கையொப்பத்துடனும், திகதியுடனும் பெரும்பாக நீர்ப்பாசன இஞ்சினியர், வடமேல் மாகாணப் பிரிவு, குருநாகல் என்ற விலாசத்திற்கு பதிவு செய்யப்பட்ட காகிதமாக அனுப்பவேண்டும். கேள்விப்பத்திரங்களை குருநாகல் பெரும்பாக நீர்ப்பாசன இஞ்சினியரின் காரியாலயத்தில் இருக்கும் கேள்விப்பத்திர பெட்டியிலும் சமர்ப்பிக்கலாம். காகித உறையின் இடது பக்கத்தில் வேலையின் பெயரைக் குறிப்பிடவேண்டும்.

3. கேள்விப்பத்திரங்கள் 17.5.60 நண்பகல் 12 மணி வரை அலுவலக நேரங்களில் ஹக்வட்டுனு ஓயா நீர்ப்பாசன இஞ்சினியரால் வழங்கப்படும். ரூ. 7,000 த்துக்கும் அதற்குமேலும் இவ்விலாகாவில் பதிவு செய்யப்பட்ட ஒப்பந்தக்காரர்கள் முன்பணமாக ரூ. 25 நீர்ப்பாசன இலாகா அதிபர் சார்பாக கச்சேரியில் பிணைக்கட்டி அதன் பற்றுச்சீட்டை சமர்ப்பித்து விண்ணப்பப் பத்திரங்களைப் பெற்றுக்கொள்ள வேண்டும்.

4. ஹக்வட்டுனு ஓயா நீர்ப்பாசன இஞ்சினியருடைய அலுவலகத்தில், அலுவலக நேரங்களில், இவ்வேலைக்குரிய படங்களைப் பார்வையிடவும் ஏனைய விபரங்களையும் அறிந்து கொள்ளலாம்.

நீர்ப்பாசன இஞ்சினியர்,
ஹக்வட்டுனு ஓயாத் திட்டம்.

நீர்ப்பாசன காரியாலயம்,
ஹக்வட்டுனு ஓயாத் திட்டம்,
மகுள் பொத்த,
இப்பகமுவ.

---

## நீர்ப்பாசன இலாகா

வடமேல் மாகாணப் பிரிவு, குருநாகல் பெரும்பாக நீர்ப்பாசன இஞ்சினியர், குருநாகல் தொகுதியிலிருக்கும் ஹக்வட்டுனு ஓயாத் திட்டத்தில், எகோடகமயிலிருந்து பாலகம வரைக்கு உள்ள பாதையில் முதலாம் மைல் வரைக்கும் கல் அறைதற்கும், தார் பூசுதற்கும், கேள்விப்பத்திரங்கள் 1960 ம் ஆண்டு, வைகாசி மாதம் 18 ம் திகதி புதன்கிழமை காலை 9.30 மணி வரை ஏற்றுக்கொள்வார்.

கேள்விப்பத்திரங்கள் ஹக்வட்டுனு ஓயா நீர்ப்பாசன இஞ்சினியரால் வழங்கப்படும். பூர்த்தி செய்யப்பட்ட இரு கேள்விப்பத்திரங்கள், ஒப்பந்தக்காரருடைய கையொப்பத்துடனும், திகதியுடனும், பெரும்பாக நீர்ப்பாசன இஞ்சினியர், வடமேல் மாகாணப் பிரிவு, குருநாகல் என்ற விலாசத்திற்கு பதிவு செய்யப்பட்ட காகிதமாக அனுப்பவேண்டும். கேள்விப்பத்திரங்களை குருநாகல் பெரும்பாக நீர்ப்பாசன இஞ்சினியரின் காரியாலயத்தில் இருக்கும் கேள்விப்பத்திர பெட்டியிலும் சமர்ப்பிக்கலாம். காகித உறையின் இடது பக்கத்தில் வேலையின் பெயரைக் குறிப்பிடவேண்டும்.

கேள்விப்பத்திரங்கள் 17.5.60 நண்பகல் 12 மணி வரை அலுவலக நேரங்களில் ஹக்வட்டுனு ஓயா நீர்ப்பாசன இஞ்சினியரால் வழங்கப்படும். ரூ. 25,000 த்துக்கும் அதற்கு மேலும் இவ்விலாக்காவில் பதிவுசெய்யப்பட்ட ஒப்பந்தக்காரர்கள் முன்பணமாக ரூ. 50 நீர்ப்பாசன இலாகா அதிபர் சார்பாக கச்சேரியில் பிணைக்கட்டி அதன் பற்றுச் சீட்டை சமர்ப்பித்து கேள்விப்பத்திரங்களைப் பெற்றுக்கொள்ளவேண்டும்.

ஹக்வட்டுனு ஓயா நீர்ப்பாசன இஞ்சினியருடைய அலுவலகத்தில், அலுவலக நேரங்களில் இவ்வேலைக்குரிய படங்களைப் பார்வையிடவும், ஏனைய விபரங்களையும் அறிந்து கொள்ளலாம்.

நீர்ப்பாசன இஞ்சினியர்,
ஹக்வட்டுனு ஓயாத் திட்டம்.

நீர்ப்பாசன காரியாலயம்,
ஹக்வட்டுனு ஓயாத் திட்டம்,
மகுள் பொத்த,
இப்பகமுவ.

---

## தபாற் தந்திப் பகுதி

### 1000 லிருந்து 1200 வரை வானொலி பற்றறிகளை (Radio Dry Batteries) விநியோகிப்பதற்கான கேள்விப் பத்திரங்கள்

குறிப்பிட்ட நியமங்களுக்கிணங்க 1000 லிருந்து 1200 வரை பற்றறிகளை (Radio Dry Batteries) விநியோகிப்பதற்கான கேள்விப்பத்திரங்கள், உற்பத்தியாளரிடமிருந்தும், உற்பத்தியாளர்களின் தத்துவம் பெற்ற விநியோகித்தர்களிடமிருந்தும் 1960 ம் ஆண்டு வைகாசி மாதம் 20 ந் திகதி மு. ப. 9.30 மணிவரை கொழும்பு, மத்திய தந்திக் கந்தோர், தந்தி தெலிபோன் பிரதான இஞ்சினியரால் ஏற்றுக் கொள்ளப்படும்.



கேள்விப்பத்திர விண்ணப்பங்கள், கொழும்பு மத்திய தந்திக் கந்தோர், தந்தி தெலிபோன் பிரதான இஞ்சினியரிடமிருந்து பெற்ற பத்திரங்களில் (இரட்டைப் பிரதிகளில்) அனுப்பப்படல் வெண்டும். இவ்வலுவலைக்குறித்து எல்லா விபரங்களையும் அவரிடமிருந்து பெற்றுக் கொள்ளலாம். கொழும்பு, மத்திய தந்திக கந்தோர், கந்திக் காசாளரிடம், கேள்விப்பத்திர பொறுப்புப் பணமாக ரூபா 100 கட்டிப் பெற்ற பற்றுச்சீட்டைச் சமர்ப்பிப்பவர்களுக்கே கேள்விப்பத்திர விண்ணப்பங்கள் வழங்கப்படும்.

கேள்விப்பத்திர விண்ணப்பங்கள் 1960 ம் ஆண்டு வைகாசி மாதம் 19 ந் திகதி பி.ப.4 மணிவரை வழங்கப்படும்.

ஒப்பந்தத்தை முறைப்படி நிறைவேற்றுவதற்காக, உறுதியின் மூலம் போதிய உத்தரவாதிகளைக் கொடுத்தல் வேண்டும். ஒப்பந்தத்தை முறைப்படி நிறைவேற்றுவதற்காக, தெரிவு செய்யப்பட்ட விண்ணப்பதாரர் கேள்விப்பத்திர மதிப்பின் 5 வீதத் தொகையை காசாக பிணைப்பணம் கட்ட வேண்டப்படுவதுடன் ஒப்பந்தத்திற் சேரும்போது உடன்படிக்கையில் முத்திரைச் சட்டப்படி, முத்திரைகளை ஒட்டவும் கடமைப்பட்டவராவர்.

1960 ம் ஆண்டு வைகாசி மாதம் 20 ந் திகதி, காலை 10 மணிவரை கொழும்பு மத்திய தந்திக் கந்தோர், தந்தி தெலிபோன் பிரதான இஞ்சினியர் காரியாலயத்தில் கேள்விப்பத்திரங்கள் திறக்கப்படும்போது கேள்விப்பத்திர விண்ணப்பதாரர்கள் சமுகமளிக்கலாம்.

எச். ஈ. செனவிரத்ன,
தபாற் தந்தித் தலைமை அதிபதி.

பிரதம தபாற் கந்தோர், கொழும்பு 1,
1960 ம் ஆண்டு ஏப்றில் மீ 25 ந உ.

---

## கொழும்பு கப்பற்றுறை அதிகாரசபை

### 2 ம் நம்பர் தேனீர்ச்சாலை—இராணி எலிசபெத் துறை மேடை

இராணி எலிசெபெத் துறை மேடைக்குக்கிட்டவாகவுள்ள 2 ம் நம்பர் தேனீர்ச்சாலையைக் குத்தகைக்குக் கொடுக்க முத்திரையிடப்பட்ட கேள்விகள் 1960 ம் ஆண்டு மே மீ 23 ந் திகதி திங்கட்கிழமை பிற்பகல் 2.30 மணிவரை ஏற்றுக்கொள்ளப்படும். குத்தகை, கப்பற்றுறை ஆணையாளரால் குறிக்கப்பட்ட திகதியிலிருந்து ஒரு வருடத்திற்காகும்.

2. கொழும்பு கப்பற்றுறை ஆணையாளர் களரியில் ரூபா 25 கட்டுப்பணமாகக் கட்டி அவ்விடமிருந்து பெறப்படும் பத்திரங்கள் பூர்த்தி செய்யப்பட்டு, இணைப்பத்திரத்துடன் அனுப்பப்படல் வேண்டும்.

3. கேள்விப் பத்திரங்கள், 1960 ம் ஆண்டு மே மீ 16 ந் திகதி நண்பகல் 12 மணிவரை களரி வேலை நேரங்களில் வழங்கப்படும்.

4. குத்தகைக்கான நிபந்தனைகள் கேள்விப் பத்திரங்களுடன் சேர்த்துக்கொடுக்கப்படும்.

எம். எல். டீ. கஸ்பேர்ஸ்,
பதில் கப்பற்றுறை ஆணையாளர்.

கொழும்பு கப்பற்றுறை அதிகாரசபை,
கொழும்பு,
1960 ம் ஆண்டு ஏப்றில் மீ 23 ந உ.

---

## இலங்கை போக்குவரத்துச் சபை

கொழும்பு 5, கிருல வீதி, 200 ம் இலக்கத்திலுள்ள இலங்கை போக்குவரத்துச் சபையின் கேள்விப்பத்திர சபைத் தலைவர், கண்டி வடக்கு 1 ம் தர டிப்போவில் பண்டகசாலைக் கட்டடம். மலகூட கட்டடம், பட்டடை ஆகியன அமைப்பதற்குக் கேள்விப்பத்திரங்களை ஏற்றுக்கொள்ளுவார்.

கேள்விப்பத்திரங்கள் 1960 ம் ஆண்டு மே மாதம் 12 ம் திகதி, முற்பகல் 10 மணிக்கு முடிவடையும்.

ரூபா 35,000 க்கும் மேற்பட்ட தொகைகளுக்கும் உள்ள வேலைகளுக்குப் பதிவு செய்யப்பட்ட கொந்தராத்துக்காரரே கேள்விப்பத்திரங்களை சமர்ப்பிக்கலாம். அவர்களுடைய சான்றோலைகள் பொரலஸ்கமுவ வெரஹெரையிலுள்ள இலங்கை போக்குவரத்துச் சபை சிவில் இஞ்சினியரின் பரிசோதனைக்கு காட்டப்படவேண்டும். இவை அப்படியாக ஏற்றுக்கொள்ளப்பட்டபின் கேள்விப்பத்திரங்கள் வழங்கப்படமுன்பு கிருல வீதி, 200ம் இலக்கத்திலுள்ள பிரதான கணக்காள உத்தியோகத்தரிடம் கேள்விப்பத்திரக் கட்டுப்பணமாக ரூ. 100 ஐக் கட்டவேண்டும்.

இலங்கை போக்குவரத்துச் சபையால் வழங்கப்பட்ட பத்திரங்களிலேயே கேள்விப்பத்திரங்கள் சமர்ப்பிக்கவேண்டும். இவை 1960 ம் ஆண்டு மே மாதம் 7 ம் திகதி நண்பகல் 12 மணிவரை சிவில் இஞ்சினியரால் வழங்கப்படும். மேலதிக விபரங்கள் அவரிடம் பெற்றுக்கொள்ளலாம்.

செயலாளர்,
இலங்கை போக்குவரத்துச் சபை.

200, கிருல வீதி, கொழும்பு 5,
1960 ம் ஆண்டு ஏப்றில் மீ 25 ந உ.

## விளம்பரம்

1960 ம் ஆண்டு வைகாசி (மே) மாதம் 10 ந் திகதி செவ்வாய்க்கிழமையும், 11 ந் திகதி புதன் கிழமையும் அரசாங்க விடுமுறை நாட்களாதலால், 1960 ம் ஆண்டு வைகாசி (மே) மாதம் 13 ந் திகதி பிரசுரிக்கப்படவிருக்கும் இலங்கை அரசாங்க வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்படவேண்டிய சகல விளம்பரங்களும் அறிவித்தல்களும் 1960 ம் ஆண்டு வைகாசி (மே) மாதம் 6 ந் திகதி வெள்ளிக் கிழமை பி.ப. 4 மணிக்கு முன்னர் அரசாங்க அச்சகத்திற்கு வந்துசேர வேண்டுமென்று இத்தால் தெரிவிக்கப்படுகின்றது.

அரசாங்க அச்சகம்,
கொழும்பு,
1960 ம் ஆடு சித்திரை (ஏப்றில்) மீ 9 ந உ.

பேர்னுர்ட் த சில்வா,
அரசாங்க அச்சகத் தலைவர்.